# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Associate Editor : Rev. Dr. K. R. RAJASEKARAN

Vol. XXVII YEAR OF OUR LORD JESUS CHRIST, SEPTEMBER 2022 No. 9


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்.

### நீதிமொழிகள் 15 : 23-33

23. மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்; ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது!

24. கீழான பாதாளத்தை விட்டு விலகும்படி, விவேகிக்கு ஜீவவழியானது உன்னதத்தை நோக்கும் வழியாம்.

25. அகங்காரியின் வீட்டைக் கர்த்தர் பிடுங்கிப்போடுவார்; விதவையின் எல்லையையோ நிலைப்படுத்துவார்.

26. துன்மார்க்கருடைய நினைவுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; சுத்தவான்களுடைய வார்த்தைகளோ இன்பமானவைகள்.

27. பொருளாசைக்காரன் தன் வீட்டைக் கலைக்கிறான்; பரிதானங்களை வெறுக்கிறவனோ பிழைப்பான்.

28. நீதிமானுடைய மனம் பிரதியுத்தரம் சொல்ல யோசிக்கும்; துன்மார்க்கனுடைய வாயோ தீமைகளைக் கொப்பளிக்கும்.

29. துன்மார்க்கருக்குக் கர்த்தர் தூரமாயிருக்கிறார்; நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்.

30. கண்களின் ஒளி இருதயத்தைப் பூரிப்பாக்கும்; நற்செய்தி எலும்புகளைப் புஷ்டியாக்கும்.

31. ஜீவனுக்கேதுவான கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொள்ளும் காது ஞானிகளிடத்தே தங்கும்.

32. புத்திமதியைத் தள்ளிவிடுகிறவன் தன் ஆத்துமாவை வெறுக்கிறான்; கடிந்துகொள்ளுதலைக் கேட்கிறவனோ ஞானமடைவான்.

33. கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை.

# அடிமையான உம்மை அதிபதியாக மாற்றுவார் ஆண்டவர்!

## GOD CAN RAISE YOU AND LIFT YOU!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்

**அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். - சங்கீதம் 113:7**

மோசே மரித்தபின்பு யோசுவா இஸ்ரவேலர்களுக்குத் தலைவரானார். **"கர்த்தருடைய தாசனாகிய மோசே மரித்தபின்பு, கர்த்தர் மோசேயின் ஊழியக்காரனான நூனின் குமாரன் யோசுவாவை நோக்கி:"** (யோசுவா 1:1) **"இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் கர்த்தருடைய ஊழியக்காரன் நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரணமடைந்தான்"** (யோசுவா 24:29). முதல் வசனம் யோசுவா மோசேயினுடைய ஊழியக்காரர் என்றும், கடைசி வசனம் யோசுவா கர்த்தருடைய ஊழியக்காரர் என்றும் சொல்லுகிறது.

**"அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார்; எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்"** (சங்கீதம் 113:7). ஆண்டவருடைய கவனம் தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள், வியாதியுள்ளவர்கள் ஆகியோர்மேல் இருக்கிறது. ஆண்டவர் ஒரே மனிதனை இன்னொரு மனிதனுடைய வேலைக்காரராக அனுமதித்து, அவரை தேவனுடைய ஊழியக்காரராக மாற்றினார். இந்த யோசுவாவின் உண்மைப் பெயர் ஓசேயா ஆகும். யோசுவா என்ற பெயரின் அர்த்தம் ஆண்டவராகிய தேவனாலே இரட்சிப்பு என்பதாகும். யோசுவாவின் வாழ்க்கையின் கருப்பொருள் உங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்பதாகும். எண்பது வயதான ஒரு மனிதனை ஆண்டவர் தூக்கியெடுத்து அவருடைய கையிலே வெற்றியின் திறவுகோலைக் கொடுக்கிறார்; அவருக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறார்.

இந்த யோசுவா பெரிய பணக்கார குடும்பத்தில் பிறந்தவர் அல்ல. அவர் எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த அடிமைகளுக்குப் பிறந்தவராவார். ஏழையும், அடிமையுமாய்ப் பிறந்த யோசுவா தன் வாழ்க்கையில் பெரிய காரியங்களை எதிர்பார்த்திருப்பாரோ என்று நமக்குத் தெரியாது.

முட்செடியிலே தேவன் மோசேக்கு வெளிப்பட்டு, "மோசே, மோசே!" என அழைத்தார். இது மோசேயின் அழைப்பு. தமஸ்குவுக்குப் போகும் வழியில் "சவுலே, சவுலே..." என்று சொல்லுகிற சத்தத்தைச் சவுல் கேட்டார். இது சவுலின் அழைப்பு. அவரைப் பெயர்சொல்லி அழைத்து, பவுலாக மாற்றினார். இந்த யோசுவாவை மாத்திரம் எந்த அடையாளமும் சொல்லிக் கூப்பிடவில்லை. அவருக்குத் தரிசனமும் கொடுக்கவில்லை; காட்சியும் கொடுக்கவில்லை; ஆனால், மோசே என்ற வயதான மனிதனிடம் கொண்டுபோய் வேலைக்கு அமர்த்தினார். அந்த மோசேதான் இவருக்கு ஆண்டவரைப் பற்றிச் சொல்லுகிறார். ஒரு வயதான மனிதரிடமிருந்து வந்த வார்த்தையின் மூலமாக வல்லமையைப் பெற்றுக் கொண்டவர்தான் இந்த யோசுவா ஆவார்.

ஆகவே, ஒவ்வொருவருடைய அழைப்பும் வித்தியாசமானது. எவரும், யாருக்கும் மிஞ்சியவர்களுமல்ல; குறைந்தவர்களும் அல்ல. மோசே திக்குவாயால் பெரிதும் பாதிக்கப்பட்டார். அவர் கீழ்ப்படியாதவர், முரட்டுத்தன்மையுடையவர். அவருக்கு முட்செடியிலே நின்று, "மோசே, மோசே!" என்று கூப்பிட்டு, அவர் பயப்படும்படியாக ஒரு அதிர்ச்சியைக் கொடுத்தால்தான் அவர் திருந்துவார். மோசே பெரிய பலசாலி, பெரிய திறமைசாலி; அவருக்கு யுத்த அனுபவம் இருந்தது, எல்லாவிதமான அனுபவங்களும்

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





### OUR MISSION POLICY

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


CHIEF EDITOR
Angeline Selvakumari Henry, M.A., M.Ed.

MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

ADMINISTRATION
Bro. N. Prakasam, M.A., General Manager

EDITORIAL BOARD
Sis. Jesy Veena Sam
Sis. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran
Dr. A. Richard Samuel, M.A., Ph.D.

EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 95661 31858

CORE LEADERS
Bro. K. Puratchivendan
Bro. A. Edward Durai
Bro. A. Alvin
Bro. K. Abraham
Sis. Dhanalakshmi Chinnaiah

E.mail ID
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

YOUTUBE CHANNEL
Echo of His Call


**"நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்."**
**– சங்கீதம் 92:12**

*கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே!*

**"நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும், சமாதானமும் உண்டாவதாக"** *(பிலேமோன் 1:3).*


*நீங்கள் சுகமாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசித்து தொடர்ந்து உங்களை ஆசீர்வதித்துக் காக்கும்படி அனுதினமும் ஜெபிக்கிறோம். நம் எல்லா ஜெபங்களுக்கும் பதில் அளிக்கிறவரும், பலன் அளிக்கிறவருமாயிருக்கிற நமது ஆண்டவரும், இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்து உங்களைக் கட்டாயம் ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பார். அவர் உங்களைத் தமது சிறகுகளால் மூடிக்காப்பார் (சங்கீதம் 91:4).*

*உங்கள் கஷ்டகாலங்களும், வியாதிகளும், கடன் தொல்லைகளும் உங்களை விட்டுக் கடந்து போகுமட்டும் தமது செட்டைகளின் கீழ் வைத்துப் பாதுகாப்பார். விக்கினங்கள் கடந்து போகுமட்டும் நீங்கள் தேவனுடைய செட்டைகளின் நிழலிலே அடைந்திருப்பதால் (சங்கீதம் 57:1). பயப்படாமல் தைரியமாயிருங்கள்; சோர்ந்து போகாமல் முன்னேறிச் செல்லுங்கள். தேவனுடைய பலத்த கரம் உங்களோடு இருக்கிறது.*

*மிகுந்த சிரமங்களுக்கிடையில்* **அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்** *அனைத்தையும் நடைமுறைப்படுத்தி வருகிறோம். புதிய ஆத்துமாக்களை ஆண்டவர் அனுதினமும் நிறைவாய்த் தந்துவருகிறார். மறுபக்கம் எங்கள் சக்திக்குமேலாக சத்துரு அளித்து வரும் பாடுகளும், பிரச்சினைகளும், பொருளாதாரத் தேவைகளும், போதுமான அளவு தரிசனம் உள்ள ஊழியர் தேவைகளும், எழுத்தின் மூலம் வெளியிடப்படமுடியாத நெருக்கங்களும் எங்களை அதிகமாக அழுத்துகின்றன. தேவகிருபையால் நாங்கள் எல்லாவற்றையும் மேற்கொண்டு வருகிறோம். நாங்களும் உங்களைப்போல் மனிதர்களாக இருக்கிறபடியால் உங்களின் ஊக்கமான ஜெபங்கள் எங்களுக்குத் தேவை.*



**டாக்டர் K.R. ராஜ சேகரன்**



**டாக்டர் A. ரிச்சர்ட் சாமுவேல்**

*உங்கள் ஜெபங்களுக்காகவும், அன்பின் ஒத்தாசைகளுக்காகவும் நாங்கள் நன்றி உள்ளவர்களாக இருக்கிறோம்.*

*மிகவும் முக்கியப் பொறுப்பாளராக நம்முடன் ஊழியம் செய்ய போதகர் டாக்டர் K.R. ராஜசேகரன் அவர்களையும், டாக்டர் A. ரிச்சர்ட் சாமுவேல் அவர்களையும் ஆண்டவர் ஆச்சரியமான வழியில் நம்மோடு இணைத்தார். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மிகவும் நல்லவர். அவருக்கே துதியும், புகழும் மென்மேலும் செலுத்துவோமாக!*

*நம்முடைய ஊழியங்களின் 54-வது ஆண்டு ஸ்தோத்திரக் கன்வென்ஷனும், புதிய ஊழியர் பிரதிஷ்டையும் கடந்த ஆகஸ்ட் மாதம் 6, 7 நாட்களில் நம் தலைமைச் சபையில் வைத்து நடைபெற்றன. சென்னைப் பட்டணத்தின் மூத்த பரிசுத்த ஊழியர்களில் ஒருவரும், நமது நெருங்கிய நண்பருமான மேய்ப்பர் S. ஆபிரகாம் அவர்களை தேவன் இக்கட்டங்களில் வல்லமையாக பயன்படுத்தினார். முழுநேர தேவ ஊழியர்களாக சகோதரி ரேமா கெத்சி அலெக்ஸ் சாம்சன், சகோதரர் J. சாமுவேல் மற்றும் சகோதரி எஸ். காந்தா ஆகியோர்* **அழைப்பின் எதிரொலி ஊழியத்திற்கென்றுப்** *புதிதாகப் பிரதிஷ்டை பண்ணப்பட்டார்கள். மட்டுமின்றி நமது அன்புக்கும், கனத்துக்கும் உரிய சகோதரர்கள் K. புரட்சி வேந்தன்,*

*A. எட்வர்ட் துரை, A. ஆல்வின், K. ஆபிரகாம் மற்றும் சகோதரி தனம் சின்னையா ஆகியோர் 3 வருடங்களுக்கு பகுதிநேர நிர்வாகிகளாகவும் இருக்கிறார்கள்.*

*நமது வருங்கால ஊழியங்களை இவர்கள் மூலம் அடுத்த உயர்நிலைக்கு கர்த்தர் எடுத்துச் செல்வார்கள் என்று பூரணமாய் விசுவாசிக்கிறோம். கர்த்தருடைய வருகை மட்டும்* **அழைப்பின் எதிரொலி ஊழியங்களைக்** *கர்த்தர் பாதுகாத்து நடத்துவார். எங்களோடு பின்னணியிலிருந்தும், திரைமறைவிலிருந்தும் ஊக்கமாயும், உண்மையாயும் எங்களுக்கு பக்கபலமாயிருந்து செயல்படுகிற உங்களையும் கர்த்தர் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பார். கடந்த 53 ஆண்டுகள் எங்களுடன் இந்த ஆவிக்குரிய ஊழியத்தில் பயணம் செய்த எல்லாருடைய பாதங்களையும் முத்தமிட்டு, வாழ்த்தி, ஆசீர்வதித்து மகிழ்கிறோம். ஆரம்பத்திலிருந்தே எங்களுடன் ஊழியம் செய்பவர்களையும், இடையில் தேவனால் சேர்க்கப்பட்டவர்களையும் ஒன்றுபோல் கனம் பண்ணுகிறோம். அழைத்தவர் உண்மையுள்ளவர். ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கே மகிமையை செலுத்துகிறோம்.*

*கிறிஸ்துவுக்குள் உங்களை நாங்கள் அதிகமாய் நேசிக்கிறோம். இந்த நிர்வாகத்தில் எங்களுடன் இணைந்து செயல்படும் சபை ஊழியர்கள், சபை மக்கள், பத்திரிகை வாசகர்கள், உதவி ஆசிரியர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், ஜெபப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள், மிஷனரிகள், போதகர்கள், மாநில உறுதுணையாளர்கள், அயல்நாட்டு உடன் ஊழியர்கள், செயின்ட் பால்ஸ் பள்ளி ஊழியர்கள், நெகேமியா வேதாகமக் கல்லூரி ஊழியர்கள், அலுவலக ஊழியர்கள், அச்சக ஊழியர்கள் மற்றும் இதர ஊழியர்களையும் நன்றியுடன் நினைத்து வாழ்த்துகிறோம்.*

*ஆண்டவர் இயேசு கிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.*

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் & அலெக்ஸ் சாம்சன் சாம்.**
(+91) 98412 71858 / 98410 71858,
மின்னஞ்சல் : samselvaraj333@gmail.com

---

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

இருந்தன. ஆனால் நடுக்காட்டில் ஒரு முட்புதர் திடீரென்று நெருப்புப் பற்றி எரிகிறது. ஆனால், அந்த முட்செடி அவிந்து போகவில்லை. அது மாத்திரமல்ல, ''மோசே, மோசே!'' என்று சத்தம் கேட்கிறது. ஆனால் அங்கு ஒருவரும் இல்லை. எப்படிப்பட்ட தைரியசாலியாக இருந்தாலும், நடுக்காட்டிலே இந்த இரண்டு சம்பவங்களும் நடக்கிற வேளையிலே, அரண்டுபோய்விடுவார். ''எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்களையெல்லாம் விடுவித்துக் கொண்டு வா'' என்று நயமாக மோசேயிடம் கேட்டிருந்தால், நிச்சயமாக அவர் அதை நிராகரித்திருப்பார். அவருக்கு அப்படிப் பட்ட தொடுதல் தேவைப்பட்டதினாலே ஆண்டவர் மோசேயை அப்படிச் சந்தித்தார்.

ஆனால் யோசுவாவுக்கு அப்படித் தேவைப்படவில்லை; அவர் மிருதுவான குணமுடையவர். ஆண்டவருடைய வார்த்தையை யாரோ ஒருவர் சொன்னதினாலே, கேட்பதற்கு அவருடைய இருதயம் திறந்திருந்ததினாலே, அவரைச் சந்திக்க வேண்டிய விதத்தில் தேவன் சந்தித்தார். ஒரு வேளை நீங்கள் எனக்கு அப்படிப்பட்ட வெளிப்பாடு இல்லை, எனக்கு அபிஷேகமே இல்லை, நான் இரட்சிக்கப்படவில்லை என்று உங்களைக் குறித்து ஒரு தவறான தாழ்வு மனப்பான்மையில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். அப்படியல்ல, நீங்கள் தனிப்பட்ட விதத்தில் ஆண்டவருக்கு நெருக்கமானவர்கள்.

நாம் ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கனம்பண்ணும்போது, நம்முடைய வாழ்க்கையிலே ஆசீர்வாதங்கள் உண்டாகும். தேவன் தமது திட்டங்களைச் சரியான நேரத்தில் செய்பவர். எந்தக் காரியத்தைச் செய்தாலும் அவர் நேர்த்தியாக ஏற்ற நேரத்தில் செய்வார். ஆனால் அவருடைய நேரமும், நம்முடைய வேகமும் ஒத்துப்போவதில்லை. நமக்கு எல்லாமே வேகமாக நடைபெற வேண்டும். நம்முடைய வேகத்துக்கு உலகம் ஒத்து வராது. இதே போலத்தான் நாம் போகிற வேகத்துக்கு, ஆண்டவருடைய நேரமும் ஒத்துவருவதில்லை. இதனாலேயே அநேகருடைய வாழ்க்கையிலே தாமதம் ஏற்படுகிறது. படிப்பிலே தாமதம், வியாதியிலிருந்து விடுதலை பெறுவதில் தாமதம், தனிப்பட்ட வாழ்க்கையிலே வரவேண்டிய நன்மைகளில் தாமதம் ஆகிய தாமதங்கள் ஏற்படுகின்றன. இவையெல்லாம் தாமதமாக வருவதற்கு காரணம், ஆண்டவர் நம்மை மறந்துவிட்டார் என்று அர்த்தமல்ல, அவர் ஏதோ ஒரு பெரிய காரியத்தை நல்லபடியாக செய்யப்போகிறார் என்பதே இதற்கு அர்த்தம். ஏற்ற நேரத்திலே தேவன் பலத்த காரியங்களைச் செய்யும்படி நாம் அவருடைய கரத்திலே அடங்கியிருக்க வேண்டும். தேவன் உங்களை ஆசீர்வதிக்கும்போது நீங்கள் இழந்துபோன ஆசீர்வாதங்களையெல்லாம் முழுமையாகத் திரும்பப்பெற்றுக் கொள்ளுவீர்கள். உங்கள் ஆயுசையும் அவர் கூட்டிக் கொடுப்பார். ஆண்டவருடைய கரத்தில் அடங்கியிருப்பது நல்லது.

அடிமைத்தனத்திலும், எளிமையிலும், வறுமையிலும் வாழ்ந்த ஒரு மனிதனை அவர் தம்முடைய கரத்திலே எடுக்கும்போது அவனை அவர் ராஜாக்களின் முன்னால் கொண்டுபோய் நிறுத்துகிறார். அவர் பெரிய நியாயாதிபதியாகவும், ஜனங்களை வழி நடத்துபவராகவும், உயர்ந்த தலைவராகவும் மாற்றப்படுகிறார். அடிமை வாழ்வு வாழ்ந்த, ஓர் ஏழ்மையான சூழ்நிலையில் இருந்த யோசுவாவை உயர்ந்த நிலைக்கு தேவன் கொண்டு செல்ல அவரது வாழ்க்கையில் காணப்பட்ட சில நமக்குத் தேவையான குணநலன்கள் எவை ?

## 1. நேர்மறை விசுவாச அறிக்கை கொண்ட யோசுவா !

ஆண்டவர் நம்முடைய வாழ்க்கையிலே இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்யவேண்டுமானால், நம்முடைய வார்த்தையிலே சாதக விசுவாசம் காணப்பட வேண்டும். செயலிலேயும் நேர்மை, விசுவாசம் காணப்பட வேண்டும். நம்முடைய நாவு, ஒரு உருவாக்கும் சக்தி. நாம் நம்முடைய நாவை மேன்மையான வார்த்தைகளைப் பேசுவதற்குப் பயன்படுத்தினால், வல்லமையான காரியங்கள் நடைபெறும். அவிசுவாசமான எதிர்மறையான வார்த்தைகளை நாம் பேசினால், துர்க்காரியங்கள் நடக்கும். நாம் நம்முடைய நாவை அடக்கப் பழக வேண்டும்.

எண்ணாகமம் 13, 14 –ம் அதிகாரங்களில், இஸ்ரவேல் புத்திரரின் தலைவர்களை மோசே கானான் தேசத்தைச் சுற்றிப் பார்த்து அது வாழ்க்கைக்குச் சரிப்பட்டு வருமா என்று கண்டுபிடிக்க அனுப்பினார். அவர்கள் அங்கே போய் பார்த்துவிட்டு கானான் தேசத்திலே பலவான்கள் இருக்கிறார்கள். மகாப் பெரிய பலசாலிகள் இருக்கிறார்கள். ''முடியாது, அங்கே போக முடியாது'' என்று அவர்கள் துர்செய்தி பரப்பினார்கள். நீங்கள் உங்கள் வார்த்தையினாலே அவிசுவாசத்தைப் பரப்பக்கூடாது. நான் பலவீனன் என்று சொல்லக் கூடாது, பலவீனன் தன்னைப் பலவான் என்று நம்ப வேண்டும். ஏழை தனக்கு எல்லாம் இருக்கிறது என்று சொல்ல வேண்டும். அவிசுவாசத்தை பரப்பக்கூடாது. விசுவாசம் உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்.

யோசுவாவும் அதே இடத்திற்கு அனுப்பப்பட்டார். இந்த மனிதரும், தன்னைவிடப் பெரிய மனிதர்களையும், வலுவான ஜனங்களையும்தான் கண்டார். ஆனால் அவர் அவர்களைப் பார்க்கவில்லை.



அவர் அங்கே செழிப்பையும், வளத்தையும் பார்த்தார். அது மகா நல்ல தேசம் என்றுச் சொல்லித் தன்னுடைய வாயினாலே அறிக்கையிட்டார். நம்முடைய வாயினாலே எதை அறிக்கையிடுகிறோமோ அதை நாம் பெற்றுக்கொள்வோம். நாம், நம்முடைய வாயின் வார்த்தைகளை உபயோகிக்கிறதிலே மிக எச்சரிக்கையுள்ளவர்களாயிருக்க வேண்டும். "இல்லை", "நடக்காது" போன்ற சொற்களைத் தவிர்க்க வேண்டும். நம்மோடுகூட இருக்கிற ஆண்டவரை வைத்துப் பெரிய காரியங்களைச் செய்ய முடியும். "தேவனுக்காகப் பெரிய காரியங்களைச் செய்யத் தீர்மானியுங்கள். தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள்" என்றார் வில்லியம் கேரி. எந்தக் காரியமும் ஆண்டவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும்.

தேவன் நம்மை எந்தச் சூழ்நிலையிலே, எத்தனைக் காலம் எந்த இடத்தில் வைக்க திட்டமாயிருக்கிறாரோ, அந்த இடத்தில் நாம் தலைநிமிர்ந்து தைரியமாக நிற்க வேண்டும். ஏனென்றால் நாம் அவருடைய பிள்ளைகள். நம்மை நடத்துகிறவர் அவரே. நம்முடைய அவசர வேகமும் ஆண்டவருடைய காலத்திட்டமும் ஒத்துப்போவது இல்லை. அவருக்கு ஒரு காலமும், நேரமும் இருக்கிறது. அவர் சரியான நேரத்திலே, சரியானபடி உங்களுக்கு நன்மை செய்வார். ஒரு வேளை அவருடைய செயல்கள் நம்முடைய கண்களுக்குத் தெரியாவிட்டாலும், நம்முடைய வாழ்க்கையில் நடக்கிற அத்தனை காரியங்களையும் அவர் கவனித்துக் கொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் மறந்து போகக்கூடாது. ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்துவார் என்று சொன்னால் அவர் உயர்த்துவார். ஏற்ற காலத்திலே நன்மைகளைக் கொடுப்பேன் என்று சொன்னால் கொடுப்பார். மனிதனை நம்புகிறதைக் காட்டிலும் ஆண்டவரை நம்புவது நல்லது.

நம்முடைய ஆலயத்தின் பழைய ஊழியக்கட்டிடம் உடைந்து போன சூழ்நிலையில், நம் கையில் கொஞ்சமும் பணம் இல்லாதிருந்தது. ஆராதனைகளை நடத்தவும், அலுவலகத்தை நடத்தவும் இடம் இல்லாமல் போய்விட்டது. ஆறு மாத காலத்திலே நம்முடைய இடத்திலே ஆலயம் கட்டப்படும், அங்கே அச்சகம் வந்துவிடும், அலுவலக அறைகள் வந்துவிடும். அவைகள் அழகாயிருக்கும். இப்படியான விசுவாச வார்த்தைகளை நான் சொன்னேன். கையிலே பணம் இருந்ததா? யாராவது நன்கொடை கொடுக்கிறேன் என்று சொன்னார்களா? யாராவது கொடுத்தார்களா? இல்லை, ஒருவரும் சொல்ல வழியில்லை. ஆனால் விசுவாச வார்த்தையை நாம் சொல்லச் சொல்ல நடக்கவேண்டிய காரியங்கள் ஏற்ற காலத்தில் நடந்து முடிந்தது. ஓர் பெரிய ஊழியக்கட்டிடம் கட்டி முடிந்தாகி விட்டதே! ஆண்டவர் தருவார். செய்ய வேண்டிய காரியங்களை ஆண்டவரே செய்வார். உங்கள் கடன்கள் தீரும், வியாதிகள் குணமாகும், கவலைகள் மாறும், கண்ணீர் மறையும், கஷ்ட காலங்கள் கடந்து போகும். என்னுடைய சூழ்நிலைகளைக் குறித்து நான் கவலைப்படவில்லை என்று சொல்லி, விசுவாச அறிக்கையிடும் போது, அறிக்கையிட அறிக்கையிட, சொல்லச் சொல்ல ஆண்டவர் நம்மை உயர்த்துவார். உள்ளவன் எவனோ அவனுக்குத்தான் கொடுக்கப்படும். இல்லாதிருக்கிறவனிடமிருந்து அவனிடம் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்.

## 2. பணிவிடை ஆவியைப் பெற்ற யோசுவா !

மோசேயினுடைய பணிவிடைக்காரராக யோசுவா இருந்தார். ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமானால் நம்முடைய ஆவியிலேயே, ஒரு பணிவிடை செய்கிற ஆவி இருக்க வேண்டும். அப்படிப்பட்டவனைத்தான் ஆண்டவர் உயர்ந்த இடத்துக்குக் கொண்டு வருவார். பெரிய தேசியத் தலைவர்களின் வாழ்க்கையைப் பார்க்கும்போது, அவர்கள்



மனசாட்சியில்லாமல் நடக்கிறார்களே என்று நாம் நினைக்கிறோம். ஆனால் அவர்களுடைய ஆரம்பகால வாழ்க்கையை நீங்கள் பார்த்திருந்தால், உண்மையாகவே பொது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்றுதான் தங்கள் வாழ்க்கையை தியாகம் பண்ணியிருப்பார்கள். அவர்களுடைய தியாகத்தை கனம்பண்ணித்தான் ஆண்டவர் அவர்களுக்கு உயர்வைக் கொடுக்கிறார். ஆனால் ஆண்டவர் சொன்னதைக் கட்டாயம் நிறைவேற்றுவார் (2 நாளாகமம் 6:4).

மற்றவர்களுக்கு உதவி செய்கிற மனநிலை உள்ளவனை ஆண்டவர் உயர்ந்த தலைவனாய் மாற்றுகிறார். என்னிடத்தில் உதவிகேட்டு வருகிறவர்களுக்கு என்னால் கூடிய உதவிகளைச் செய்ய வேண்டும் என்கிற மனச்சாட்சியை ஆண்டவர் எனக்குக் கொடுத்திருக்கிறார். சபையிலுள்ள ஒவ்வொருவரின் பாரத்தையும் நான் எடுத்து என் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு, அதற்காக என்னால் இயன்றதைச் செய்ய முற்படுவதாலே தான் தேவன் என்னை ஆசீர்வதிக்கிறார்.

**"உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்"** (மத்தேயு 20:27). அவன் உங்களுக்கு ஊழியஞ்செய்யட்டும், ஊழியக்காரருக்கு ஊழியம் செய்யட்டும், வேலைக்காரனுக்கு வேலைக்காரனாயிருக்கட்டும், வேலைக்காரனுக்கு வேலைக்காரனாயிருக்கிறவனை ஆண்டவர் உயர்ந்த தலைவனாக மாற்றுவார்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்.....

நெகேமியா மாலை நேர வேதாகமக் கல்லூரி

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், சென்னை

போதனா மொழி : தமிழ்

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

Regd. Candidate for Membership ATA NEHEMIAH BIBLE COLLEGE CHENNAI ★ ECHO OF HIS CALL ★ Estd.: 1969

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2022 செப்டம்பர் 19 முதல் அக்டோபர் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

செப்டம்பர் 19 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் இன்றுவரை ஆசீர்வதித்ததற்காக...

செப்டம்பர் 20 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரிக்கு** புதிய மாணவர்களை கொடுத்து ஆசீர்வதித்து வருவதற்காக ...

செப்டம்பர் 21 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை நமது சுவிசேஷ அச்சகத்திலேயே 16 மொழிகளில் அச்சடிக்கப்பட்டு அனைத்து பணித்தளங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறதற்காக ...

செப்டம்பர் 22 ⇨ நமது பணியாளர்கள் அனைவரது குடும்பத்தினர் மீதும் கர்த்தருடைய ஆசீர்வாதம் பொழியப்பட்டதற்காக...

செப்டம்பர் 23 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக ...

செப்டம்பர் 24 ⇨ நமது அஞ்சல்வழி இறையியல் கல்வி மற்றும் தொலைதொடர்பு வேதாகமக்கல்வி முறைகளின் வளர்ச்சிகளுக்காக ...

செப்டம்பர் 25 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அனைவருக்காகவும்...

செப்டம்பர் 26 ⇨ நமது தலைமைச் சபைக்கு களப்பணி ஆர்வம் உள்ள அங்கத்தினர்களைத் தந்து ஆசீர்வதித்ததற்காக...

செப்டம்பர் 27 ⇨ நமது பத்திரிகை ஊழியத்திற்கு புதிதாக இணை ஆசிரியராக டாக்டர் K.R. ராஜசேகரன் அவர்களைக் கொடுத்ததற்காக...

செப்டம்பர் 28 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்காக...

செப்டம்பர் 29 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை எல்லாவிதமான தீய வல்லமைகளுக்கும் விலக்கி காத்து வருவதற்காக...

செப்டம்பர் 30 ⇨ நமது ஜூலை மாதத்தின் தேவைகளை சந்தித்ததற்காக...

அக்டோபர் 01 ⇨ வேதாகம ஆராய்ச்சிக்கான மாநாடுகளை தொடர்ந்து நடத்தி வருவதற்காக...

அக்டோபர் 02 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டி வருகிறதற்காக...

அக்டோபர் 03 ⇨ எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்ததற்காக....

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

அக்டோபர் 04 ⇨ நமது ஆலயத்திலுள்ள அனைத்து விசுவாசிகளையும் ஆசீர்வதித்து வருவதற்காக...

அக்டோபர் 05 ⇨ நமது நிறுவனத்திற்காகவும், நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்திற்காகவும்...

அக்டோபர் 06 ⇨ நமது தலைமைப் போதகர் எழுதிவரும் சுயசரிதைக்கான வழிநடத்துதல்களையும் மற்றும் வழிவாசல்களையும் அபரிமிதமான அளவில் ஆசீர்வதிக்க வேண்டி...

அக்டோபர் 07 ⇨ தேசங்களின் சமாதானத்திற்காகவும், அமைதிக்காகவும்...

அக்டோபர் 08 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளியின்** புது மாணவர் சேர்க்கைக்காக...

அக்டோபர் 09 ⇨ நமது பங்காளர்கள், மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர்களுக்காக...

அக்டோபர் 10 ⇨ நம்முடைய சுவிசேஷ அச்சகத்திற்காக...

அக்டோபர் 11 ⇨ நமது வேதாகமக் கல்லூரியில் நடைபெறும் மாலை நேர மற்றும் முழு நேர வகுப்புகளுக்காக...

அக்டோபர் 12 ⇨ நமது பொருளாதாரத் தேவைகள் அனைத்தும் சந்திக்கப்பட வேண்டி...

அக்டோபர் 13 ⇨ மது அருந்தும் பழக்கம் உடையோர் மற்றும் தீயபழக்கம் கொண்டோர் மனந்திரும்ப...

அக்டோபர் 14 ⇨ உலகெங்குமுள்ள அனைத்துப் பெண்களும், சிறுவர் சிறுமியரும் பாதுகாப்பாக வாழ்ந்திட வேண்டி...

அக்டோபர் 15 ⇨ ஆண்டவரது இராஜ்யம் பூமியில் நிலைப்பட மேலும் கூடுதலான தரிசனங்களை நம்மிடத்தில் அருளவேண்டி...

அக்டோபர் 16 ⇨ **அழைப்பின் எதிரொலியின்** வாலிப மற்றும் கள ஊழியங்களுக்காக...

அக்டோபர் 17 ⇨ சுவிசேஷம் சென்றடையாத இந்திய நாட்டின் பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி...

அக்டோபர் 18 ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் குடும்பத்தினரின் நல்ல ஆரோக்கியத்திற்காக...

... 4–ம் பக்கத் தொடர்ச்சி

1969 –ம் ஆண்டு “வருகையின் தூதன்” ஆசிரியர், தேவ ஊழியர் எஸ். தேவதாசன் அவர்களிடத்தில் நான் தேவ ஊழியம் செய்யச் சென்றபோது எனக்கு முதலாவதாக அவர்களுடைய அலுவலகத்தையும், அங்குள்ள பொருட்களையும் சுத்தம் செய்யும் வேலை கொடுக்கப்பட்டது. நான் அதை சந்தோஷமாக ஏற்றேன். அலுவலகத்தைப் பெருக்கினேன். தேய்ந்துபோன துடைப்பத்தின் குச்சிகளை அழகாக அடுக்கிக் கட்டி பெருக்கினேன். நாட்கள் கடந்தன, மாதங்கள் கடந்தன, வருடங்கள் கடந்தன. அந்த பரிசுத்தவான் தன்னுடைய பெரிய பொறுப்புக்களையும், பணப்பெட்டிச் சாவியையும் என் கையில் கொடுத்துவிட்டு “உன்மேல் தேவ ஆவியானவர் இருக்கிறார். நீதான் எல்லாவற்றிலும் ரொம்ப அறிவாளியாயிருக்கிறாய்” என்று என்னிடத்தில் சொன்னார்கள். என்னை உயர்ந்த இடத்தில் வைக்க ஆண்டவர் அவர்களுடைய உள்ளத்திலே பேசினார். அவர்கள் மேல் இருந்த அபிஷேகமும், அன்பும் என் மேல் விழுந்து, நான் தேவ ஊழியனாக மாறினேன். பணிவிடை செய்யும் ஆவியால் நாம் நிரப்பப்பட வேண்டும்.

இந்த நாட்களிலும் பலர் சிறந்த ஊழியர்களாகவும், தலைவர்களாகவும் மாற முன்வருகின்றனர். ஆனால் முதிர்ச்சியடைந்த – கற்றுத்தேர்ந்த – விசுவாச வாழ்க்கையில் வெற்றியடைந்த ஓர் நல்ல முன்னோடியைத் தெரிந்து கொண்டு அவரிடமிருந்து வெற்றி வாழ்க்கையில் இரகசியங்களை கற்றறிய முன்வருவதில்லை. எடுத்த எடுப்பிலே ரெவரன்ட், டாக்டர், பிஷப், பாஸ்டர், வரம் பெற்ற ஊழியர், அகில உலக ஊழியர் என்றுத் தங்களை அறிமுகம் பண்ணிக்கொள்ள முன்வருவதுடன், ஆவிக்குரிய வாழ்க்கையின் உண்மை நிலைகளை அறியாமலேயே சீக்கிரம் முன்னேறிவிட விரும்புகிறார்கள். இவர்கள் வெகுவிரைவில் ஏதாவது சோதனைகளிலோ, கஷ்டங்களிலோ, பாடுகளிலோ சிக்கி ஆவிக்குரிய வாழ்க்கையின் உண்மைத் தன்மையை இழந்து, தங்கள் இஷ்டம்போல் பேசவும், ஊழியம் செய்யவும் தள்ளப்படுகிறார்கள். எனவே, யாராக இருந்தாலும் உயர்ந்த மனிதர்களிடமுள்ள உயர்ந்த பண்புகளையும், குணநலன்களையும், பழக்க வழக்கங்களையும் கற்றறிந்து அவற்றைத் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.

என் ஊழியக் காலத்தில் என்னை வழிநடத்தியப் போதகர் மறைதிரு எஸ். தேவதாசன் (வருகையின் தூதன்) அவர்களிடத்தில் கீழ்க்காணும் மூன்று முக்கிய பண்புகளை நான் கற்றுக் கொண்டேன்.

### (அ) காலந்தவறாமை (Punctuality):

எந்த விஷயத்தையும், செய்ய வேண்டிய காலத்தில் முன்னுரிமையின் அடிப்படையில் (priority basis) செய்ய வேண்டும். எந்த இடத்துக்கு நம் கடமையை நிறைவேற்றச் சென்றாலும் காற்று, மழை, போக்குவரத்து நெரிசல்–இவற்றைச் சமாளிக்க சற்று இடைவெளி நேரத்தை (cushion time) அனுமதித்து, குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகச் செல்ல முற்பட வேண்டும். நாம் பணி செய்யும் பணியிடத்திற்கும், தேவாலயத்திற்கும் எக்காரணங்கொண்டும் தாமதமாகச் செல்லும் பழக்கம் இருக்கலாகாது. அது தோல்வியில் கொண்டு சேர்க்கும்.

### (ஆ) பொறுப்புடன் நடத்தல் (Responsibility):

செய்யும் காரியம் மிக அற்பமானதாக இருந்தாலும் அதிகப் பொறுப்புணர்ச்சியுடன் செய்ய வேண்டும். ‘செய்வதைத் திருந்தச் செய்’ என்பது ஓர் தமிழ்ப் பழமொழி. பொறுப்பில் உள்ளவர்கள் நம்மைச் சார்ந்திருக்கும் பிறருடைய வாழ்க்கையில் தேவைகளையும், அவர்களைப் பற்றிய இரகசியங்களையும் கருத்தாய்த் தங்கள் மனதில் பதிக்க வேண்டும். எந்தக் காரியம் எப்படிப்போனால் நமக்கு என்ன ? என்பதின் அடிப்படையிலும் “இப்போது இப்படி செய்வோம்; பிறகு யாராவது கண்டுபிடித்தால் அதன்பிறகு ‘மன்னிக்கவும்’ என்று சொல்லி சரியாகச் செய்வோம்” என்ற மனநிலை உள்ளவர்கள் ஒருபோதும் முன்னேறமாட்டார்கள்.

இது இரண்டு காரியங்களை உள்ளடக்கியுள்ளது. அதாவது, நாம் எந்தக் காரியத்தைச் செய்தாலும் நம் முழு அறிவையும் பயன்படுத்த வேண்டும். நம் முழு நம்பிக்கையையும் பயன்படுத்தி காரியங்களைச் செய்ய வேண்டும்.

உதாரணமாக, சிலர் தங்கள் கடமைகளைச் செய்யும் போது, தாங்கள் சரியாகச் செய்திருக்கிறார்களா என்று சற்றேனும் சரிபார்க்காமலும், அதைப் பற்றி சற்றேனும் கவலைப்படாமலும், “சாமர்த்தியமும், திறமையும் இருந்தால் எனக்கு மேல் உள்ளவர்களோ, மற்றவர்களோ என் தவறுகளைக் கண்டுபிடித்து, அவற்றைச் சுட்டிக் காட்டட்டும். பிறகு சரிப்படுத்திக் கொள்ளலாம்” என்ற அடிப்படையில் காரியங்களைச் செய்பவர்கள் வாழ்க்கையில் பெரும்பேறுகளைப் பெற முடியாது. எனவேதான் முக்கியமான காரியங்களில் “என் முழு அறிவுக்கும், என் முழு நம்பிக்கைக்கும் உட்பட்டு இதனை உறுதி கூறுகிறேன்” என்று உறுதியளிக்கிறோம். (I assure that all the particulars given above are true to the best of my knowledge and belief).

### (இ) ஈடுபாடு (Involvement):

நாம் ஆற்றும் எல்லாக் கடமைகளிலும் நம் சொந்தப் பங்கு (Personal contribution) ஒன்றை உட்படுத்த வேண்டும். இது நம்முடைய சொந்த வேலையும் இல்லை; இந்த பொருட்கள் நம்முடைய சொந்த சொத்துக்கள் இல்லை; இதன் இலாப நஷ்டம் நமக்குரியதல்ல என்ற மனநிலை தோல்விக்கு வழிவகுக்கும்.

ஒரு இடத்தில், தரையைப் பெருக்கி, சுத்தம் செய்யும் வேலையைச் செய்தாலும் சரி, ஒரு ஸ்தாபனத்தின் மிக உயர்ந்தப் பதவியை வகித்தாலும் சரி, கடமைக்கென்று தங்கள் உத்தரவாதங்களைச் செய்யாமல், “இதில் என் பங்கு ஒன்று இருக்க வேண்டும்” என்ற ஈடுபாடுள்ள மனநிலை உள்ளவர்கள் வாழ்க்கையில் கட்டாயம் முன்னேறுவர்.

தொடர்ச்சி 9–ம் பக்கம்.....

முழுநேர இந்தி வகுப்புகள்
நெகேமியா வேதாகமக் கல்லூரி, சென்னை.
வேளச்சேரி, சென்னை
போதனா மொழி : இந்தி
Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)
உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 53 வருட அனுபவ ஸ்தாபனம்.
Certificate in Theology : ஒரு வருடம்
Diploma in Theology : இரண்டு வருடங்கள்
கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !
தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

| | |
|---|---|
| 1. ஜெப உதவி | – 24 மணி நேரம் |
| 2. வேதாகமக் கடித முறைக் கல்வி | – தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 3. அழைப்பின் எதிரொலி தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒரியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகன். | – பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| 4. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – (இரு இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம் |
| 5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | |
| 7. பயிற்சி வகுப்புகள் | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | |
| 12. சிறுவர் வேத பாடசாலை | – ஞாயிறு காலை 8.30 மணி மாலை 4.00 மணி |
| 13. தமிழ் ஆராதனைகள் | – ஞாயிறு காலை 8.00 மணி & 10.00 மணி |
| 14. இந்தி ஆராதனை | – ஞாயிறு மாலை 4.00 மணி |
| 15. தெலுங்கு ஆராதனை | – ஞாயிறு மாலை 5.00 மணி |
| 16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை | – ஞாயிறு மாலை 6.00 மணி |
| 17. போதகர் ஆலோசனைக் கூட்டம் | – ஞாயிறு மாலை 4.00 மணி |
| 18. பெண்கள் ஆராதனை | – புதன் மாலை 5.30 மணி |
| 19. இறையியல் கல்வி | – புதன் மாலை 6.30 மணி |
| 20. ஆண்கள் ஆராதனை | – வெள்ளி இரவு 7.00 மணி |
| 21. சீஷத்துவக் கூட்டம் | – சனி மாலை 6.00 மணி |
| 22. வீட்டுக் கூட்டங்கள் | – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 23. விசேஷ திருவிருந்து | – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 24. ஊழியர்கள் கூடுகை | – முதல் சனிக்கிழமை மாலை 5.30 மணி |
| 25. பெற்றோர் ஜெபம் | – முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி |
| 26. இரவு ஜெபம் | – 2–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 27. உபவாச ஜெபம் | – மூன்றாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 28. திருவிருந்து | – 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 29. அதிகாலை ஜெபம் | – தினமும் காலை 5.00 மணி |
| 30. ஊழியர் ஜெபம் | – தினமும் காலை 9.00 மணி |
| 31. அலுவலகம் | – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

# அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

## இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

## I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

## II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அலுவலகப் பணியாளர்கள் தேவை!

அழைப்பின் எதிரொலி ஊழியத்திற்காக கம்யூட்டர் மற்றும் தட்டச்சு ஆகியவற்றில் அனுபவமும், திறமையும் வாய்ந்த **அலுவலகப் பணியாளர்கள் தேவை.**

தொடர்புக்கு :
**அழைப்பின் எதிரொலி**
செல் : 98412 71858
மின் அஞ்சல் : sam@echoofhiscall.org

## வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| Account Name | : ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST |
| Account Number | : 1023 2923 805 |
| Bank Name | : STATE BANK OF INDIA |
| Branch | : TRIPLICANE, CHENNAI - 600 005 |
| IFSC Code | : SBIN 0000249 |
| SWIFT Code | : SBI NIN BB 455 |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## என் இளமையின் மறுபக்கம்!!

## The other side of my youth!!

என்னுடைய இளமைப் பருவத்திலேயே, என் இருதயம் தேவனோடும், தேவ ராஜ்யத்தின் காரியங்களோடும் மிக நெருக்கமாக இருந்தது. தேவபயம் என் வாழ்க்கையின் உயிர் மூச்சாகவும், கர்த்தருக்குப் பரிசுத்தம் என்பது என் வாழ்க்கையின் அச்சாணியாகவும் இருந்தன. என் எல்லா செயல்பாடுகளிலும், தேவன் என்மேல் வைத்திருந்த அவரது கவனத்தையும், என் உள்ளத்தில் அமைந்திருந்த (in-built) தேவ திட்டத்தையும் இழந்து விடாதபடி தேவன் என்னை வழிநடத்தினார். தேவ காரியங்களில் மிகக் கூர்மையான மனநிலையும், உலகக்காரியங்களில் மகா பேதமையான, மந்தமான மனநிலையையும் நான் உடையவனாயிருந்தேன். ஆனால் ஜெபத்தில் மிக உறுதியாயிருந்தேன்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக என் வாழ்நாளின் ஒவ்வொரு நிமிடத்தையும் ஓர் பாக்கியமாகவும், உயர்வாகவும் கருதினேன். தேவனுக்காக எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் என்னுடைய சுயத்தை உருக்குலையச் செய்து, தேவராஜ்யத்துக்கென்று பலசாலியான மனிதன் எனக்குள் ஒருவன் பிறந்து ஓர் தேவ ராஜ்யப் பிரதிநிதியாக உருவெடுத்தது எனக்கு நன்றாகத் தெரிந்தது. உலக மக்களுக்குப் புலப்படாதவிதத்தில் நான் ஓர் வித்தியாசமான சக்திக்குக் கட்டுப்பட்டவன் என்ற சிந்தனை என்னை அங்குமிங்கும் அசையவிடாமல் வழிநடத்தியது.

எப்படியாவது சிலரை சேர்த்து ஒரு குழுவாக இந்த உலகத்திற்கு நற்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற பேரவாவினால் நான் சார்ந்திருந்த நெல்லறைக்கோணம் C.S.I. கிராம சபையில் உள்ள சில உற்சாகம் உள்ள சகோதரர்கள் செ. ஆபிரகாம், யா. ஆல்பர்ட் தேவதாஸ், பொ. சாம்ராஜ், Y. தங்கமணி, S. பால்ஸ், J. ஜார்ஜ் ராபின்சன், S. பென்சன் ஜேசுதாஸ், சகோதரிகள் தே. பேபி சுசீலா மற்றும் J. கனகம்மாள் ஆகியோரை ஒன்று திரட்டி 'நற்செய்தி ஜெபக்குழு' (Good News Prayer Band) என்ற குழுவை 1969–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10–ம் தேதி ஜெபத்துடன் ஆரம்பித்தோம். இவ்வூழியத்தின் முதல் மாத வருமானம் 2 ரூபாயாக (இந்திய ரூபாய்) இருந்தது. பழைய கணக்கு புத்தகங்களையும், நடப்பு (minutes) கணக்கு புத்தகங்களையும் பத்திரமாக வைத்து இருக்கிறேன்.

இந்த முயற்சியின் மூலம், ஜெபக்கூட்டங்களும், சபைகளில் ஆவிக்குரிய நற்செய்திக் கூட்டங்களும் நடத்தப்பட்டன. ஏராளமான மக்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டு, இரட்சிக்கப்பட்டு தேவ ஊழியத்தில் இணைந்தனர். இந்த சந்தர்ப்பத்தில் சகோதரர்கள் G. ஜெயானந்த பால்மணி, A. செல்வராஜ், வெஸ்லி தேவதாசன், ஜான் ரோஷ் கமலம், ஜெயச்சந்திரன், ஆகியோர் என்னுடன் இணைந்து ஊழியம் செய்ய வந்தது தேவனுடைய சுத்தக் கிருபையே. நாங்கள் சேர்ந்து இசைக்கருவிகளை வாசித்து, பாடல்களைப் பாடி, இரட்சிப்பின் சுவிசேஷத்தை இலவசமாய்ப் பிரசங்கித்தோம். நான் ஹார்மோனியம் என்ற இசைக்கருவியையும், அண்ணன் வெஸ்லி தேவதாசன் அவர்கள் கிடார், டேவிட் ரெஜினால்ட் அவர்கள் வயலின், ஜான் ரோஷ் கமலம் அவர்கள் வயலின், பொ. சாம்ராஜ் அவர்கள் பேங்கோஸ் போன்ற இசைக்கருவிகளை இசைத்துப் பாடி எதிர்ப்புகள் நிறைந்த சூழ்நிலைகளையும் சாதகமாக்கி பிரசங்கம் மற்றும் அச்சுக் கைப்பிரதிகள் மூலம் தேவ ஊழியம் செய்தோம்.

நெல்லறைக்கோணம், தக்கலை, நெய்யூர், உடையார் விளை, குளச்சல், கருங்கல், குழித்துறை, மார்த்தாண்டம், கடமலைக்குன்று, நாகர்கோவில், மூவாற்றுமுகம், பள்ளியாடி, பேச்சிப்பாறை, கோதையாறு, கன்னியாகுமரி, முட்டம் போன்ற ஊர்களில் உள்ள சபைகள் மூலமும், இதரவழிகளிலும் சுவிசேஷக் கூட்டங்களை நடத்தியதன் விளைவாக அழிவின் பாதையில் வாழ்ந்த ஏராளமான





சகோ. வெஸ்லி தேவதாசன்
*(Herald of His Coming)*



போதகர் ஜான் ரோஷ் கமலம்
*(Presbyter, Church of South India)*



போதகர் ஜெயச்சந்திரன்
*(Presbyter, Assembly of God)*



சகோ. டேவிட் ரெஜினால்ட்
*(Lay Preacher)*

பிள்ளைகள், வாலிபர்கள் மற்றும் பெரியோர்கள், போதைப் பொருட்கள், சினிமா, சிற்றின்பங்கள் – இவற்றின் பிடியிலிருந்து விடுபட்டு தங்கள் பாவ வாழ்க்கையிலிருந்து மனம் திரும்பி, பரிசுத்த வாழ்க்கைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தனர். ஏராளமான வியாதியஸ்தர் மற்றும் பிசாசின் பிடியிலிருந்தோர் விடுதலை அடைந்தனர். இது எனக்கு ஒருவிதமானப் புதிய தெம்பையும், உற்சாகத்தையும் அளித்தது. யாருடைய உந்துதலுமின்றி, போக்குவரத்து வசதிகள் போதுமான அளவு இல்லாத சூழ்நிலையில், சுமார் 15 மைல் 20 கிலோ மீட்டர் தூரம் வரை காலணி இல்லாமல், கால்நடையாய்ச் சென்று கைப்பிரதிகளை வினியோகித்தும், வீட்டுக் கூட்டங்களை நடத்தியும் சுவிசேஷச் செய்திகளைப் பரப்பினேன். அக்காலத்தில் உலக மக்கள் ஒரு பைத்தியம் பிடித்த வாலிபனாக என்னைக் கருதினார்கள்; எனது ஊழியத்தில் சிறிய, சிறிய அற்புதங்களையும், அதிசயங்களையும் தேவன் நடப்பித்தார். ஆனால், என் குடும்பத்தினர் என்னை ஓர் தெய்வப்பிறவியாக பாவித்து நேசித்தனர்.

என் ஆரம்பக் காலத்தில் தேவனுடைய பிரியமான வேலைகளைச் செய்வதற்கு சாதக சூழ்நிலைகளும், பிறருடைய உந்துதலும், ஊக்கமளித்தலும் இல்லாவிட்டாலும் நான் சுயமாகவே காரியங்களை சிந்தித்து செயல்படுத்துவதற்கு வைராக்கியமுடையவனாக இருந்தேன். இந்நிலையில்தான் அச்சுப்பிரதிகள் மூலம் தேவ ஊழியம் செய்யும்படி ஆண்டவர் வழிநடத்தினார்.

(தொடரும் . . .)

************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

இப்படியாக எப்போதும் நாம் பெரியவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளக் கூடிய விருப்பமும், தாகமும், ஆசையும் (teachable, learnable) உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

## 3. அதிகாரத்துக்குக் கீழ்ப்படிந்த யோசுவா !

“**அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே இஸ்ரவேலரோடே யுத்தம்பண்ணினார்கள்**” (யாத்திராகமம் 17:8). இந்தச் சூழ்நிலையில் அமலேக்கியரோடே யுத்தம்பண்ணும்படி மோசே யோசுவாவிடம் சொல்லுகிறார். யோசுவா உடனடியாகப் போர்க்களத்தில் இறங்கி அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார். அநேகருக்கு தங்களுக்குமேல் இருப்பவர்களுக்கு கீழ்ப்படியும் மனம் கிடையாது. கடவுளுக்கும் கீழ்ப்படிவதில்லை. தனக்கு மேலேயிருக்கிற அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிவதில்லை. பணிவிடை ஆவி மாத்திரமல்ல, தனக்கு மேலேயிருக்கிற அதிகாரிகளுக்கும், அதிகாரத்திற்கும் கட்டுப்படுகிற மனப்பாங்கு நமக்கு இருந்தால்தான், நாம் உயர்ந்த தலைவர்களாக வர முடியும். அதிகாரத்துக்குக் கீழ்ப்படிகிற ஒருவன்தான் மற்றவர்களிடத்தில் அதிகாரம் செலுத்த முடியும். நான் கடவுளுக்கும் கீழ்ப்படிய மாட்டேன், யாருக்கும் கீழ்ப்படிய மாட்டேன், எனக்கு மேலிருக்கிறவர்களுக்கும் கீழ்ப்படியமாட்டேன் என்று சொல்லுகிற ஒருவனுடைய கையிலே ஆண்டவர் அதிகாரத்தைக் கொடுக்கமாட்டார். அப்படியே கொடுத்தாலுங்கூட ஒருவனும் அவனுக்குக் கீழ்ப்படியமாட்டான். ஆகவே யோசுவா அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டிருந்தார். மோசே அவரிடம் “நீ போய் யுத்தம்பண்ணு” என்று சொன்னவேளையிலே உடனடியாக யுத்தத்திற்கு இறங்கினார். எனக்கு அப்பியாசம் கிடையாது. பழக்கம் கிடையாது என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள விரும்பவில்லை. அவர் உடனடியாக யுத்தத்தில் இறங்கினார்.

## 4. தேவனுடைய ஆலயத்தை கனம்பண்ணிய யோசுவா !

“யோசுவா என்கிற வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை (தேவனுடைய ஆலயத்தை) விட்டுப் பிரியாதிருந்தார்” (யாத்திராகமம் 33:11). யோசுவா ஒரு நல்ல தலைவர். ஆண்டவரால் நேசிக்கப்பட்ட ஒரு மனிதர். அவர் தேவனுடைய ஆலயத்தை நேசித்தார். அவர் ஆசரிப்புக் கூடாரத்திலே தங்கினார். தேவனுடைய ஆலயத்தையும் அதன் ஊழியங்களையும் நேசிக்கிற மனிதர்களை தேவன் உயர்த்துகிறார். இன்றைக்கும் இலங்கிப் பிரகாசிக்கிற பெரியத் தலைவர்கள் தேவனுடைய ஆலயத்தை நேசித்தவர்கள்.

இன்றைய உலகில், சபையாகக் கூடி ஆலயத்தில் வந்து, தேவனை ஆராதிக்க மக்களுக்கு மனம் இல்லை. பிரபல தேவ ஊழியர்களும் மக்களை அனுமதிப்பது கிடையாது. உதாரணமாக, மக்கள் ஆறு நாட்களும் கடுமையாக உழைக்கிறார்கள். ஞாயிற்றுக் கிழமை அவரவர் தம்தம் ஆலயத்திற்குப் போகவேண்டும் என்பது அடிப்படை நியதி. ஆனால் இன்றைக்கு தொலைக்காட்சியில் பிரசங்கிக்கும் பிரபல சுவிசேஷகர்கள், தங்களுக்கு அதிக வாடிக்கையாளர்கள் வேண்டும் என்பதை மனதிற்கொண்டு ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் தங்கள் செய்திகளை தொலைக்காட்சியில் பிரசங்கித்து, தேவ மக்களை திசை திருப்பி மக்களுக்கும், தேவ சபைக்கும் இடையே பாலமாயிருக்க வேண்டியவர்கள் பிளவை ஏற்படுத்தியவர்களாக மாறிவிட்டனர். ஞாயிற்றுக்கிழமை வெளியாகும் கிறிஸ்தவ டி.வி. நிகழ்ச்சிகள் ஒருவேளை ஆலயங்களுக்கு போக முடியாத முதியோர், வியாதியஸ்தர்களும் தங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று கருதலாம். ஆனால் ஆலயம் செல்ல முடியாத முதியோர், வியாதியஸ்தர் தவிர மற்ற எல்லோரும் அன்று கட்டாயம் தேவாலயங்களுக்குப் போக



வேண்டும். சபை கூடி வருதலை தேவன் கட்டாயப்படுத்துகிறார். உங்கள் ஆலயத்தை முக்கியப்படுத்தி அதில் நடைபெறும் எல்லா ஊழியங்களிலும் தியாகத்துடன் பங்கு பெறுங்கள். உங்களுக்கென்று ஒரு நல்ல போதகரையும், சபையையும் தெரிந்தெடுங்கள். ஒழுங்காக ஆலயத்திற்குப் போங்கள். நீங்கள் ஒரே போதகரிடம் கடைசிவரை அடங்கி இருங்கள். தேவ ஆசீர்வாதம் தானாக உங்களைத் தேடி வரும்.

## 5. தீர்மானம் எடுப்பதில் உறுதியுள்ள யோசுவா !

அவர் பயங்கரமான சிக்கலான நேரத்திலே, ஒரு நல்லத் தீர்மானம் எடுக்கிறார். சரியான தீர்மானம் எடுப்பவர்களை ஆண்டவர் உயர்த்துகிறார். திடமாகத் தீர்மானம் எடுப்பவர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். எடுத்த தீர்மானத்திலே உறுதியாய் இருக்க வேண்டும். இப்படிப்பட்டவர்களை ஆண்டவர் உயர்த்துகிறார். “**... நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் ...**” (யோசுவா 24:15) என்று யோசுவா ஜனங்களைப் பார்த்துச் சொல்லுகிறார். நாங்கள் கர்த்தருக்காக நிற்கின்ற மன உறுதியுள்ள, தைரியமாகத் தீர்மானம் எடுக்கக்கூடிய மக்களை இன்றைக்கும் ஆண்டவர் தேடிக் கொண்டிருக்கிறார்.

அது மாத்திரமல்ல, அவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட இந்த தேவ வெளிப்பாட்டை எவ்வித கூச்சமும் வெட்கமும் இல்லாமல், பின்விளைவுகளை எண்ணாமல் பிறரிடம் சவால் விட்டுப்பேசி, பிறரையும் கர்த்தரை சேவிக்க வழிகாட்டுகிறார்கள். ஆனால் இந்த நாட்களில் தரிசனமும், அழைப்பும், விசுவாசமும், உபதேசத்தில் உறுதியும் இல்லாத ஊழியர்களும் ஏராளம் எழும்பிவிட்டார்கள். ஆகவே, இரட்சிக்கப்படாத விசுவாசிகளும் பெருகி வருகிறார்கள்.

எனவே, நீங்களும், நானும் தேவனை மட்டும் சார்ந்து வாழவேண்டும். நாம் விசுவாசத்தில் தெளிவும், உண்மையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நம் பக்கம் ஏராளம் மக்கள் வந்து சேரும் போது, நம்முடைய

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/21-23 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/21-23

உள்ளங்களையோ, வருமானத்தையோ மட்டும் கருத்திற்கொள்ளாமல் மக்களுக்குச் சென்று சேரவேண்டிய மனந்திரும்புதலையும், பரிசுத்த வாழ்க்கையையும், சவாலுடன் அறிவித்து, மக்களை நல்வழிப்படுத்த முன்வர வேண்டும். ஏனென்றால், உலகம் ஒவ்வொரு நாளும் கெட்டுக்கொண்டே போகிறது. இந்த மிகவும் அபாயகரமான கேட்டிலிருந்து மக்களை விடுவிக்க யோசுவாவைப் போல் நல்ல தீர்மானம் எடுங்கள். உங்கள் வாழ்க்கை முற்றிலும் மாறும். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்!

************

## OUR BANK DETAILS:

### 1. Bank : State Bank of India

Branch : Triplicane, Chennai-5
Name : S. Sam Selva Raj
A/C No. : 1023 2934 679
IFSC : SBIN 00 00 249
SWIFT CODE : SBI NIN BB 455

### 2. Bank : ICICI Bank

Branch : Anna Salai, Chennai-6
Name : Echo of His Call
A/C No. : 6038 0502 2319
IFSC : ICIC 000 6038

### 3. Bank : State Bank of India

(This Account is for Tax Exemption for Indians only )

Branch : Triplicane, Chennai-5
Name : Echo of His Call Educational Trust
A/C No. : 1023 2923 805
IFSC : SBIN 00 00 249

Google Pay: 98410 71858
PayPal : SAM SELVA RAJ

*****

E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❋ வருட சந்தா ரூ. 100/– ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.


## அழைப்பின் எதிரொலி,

**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**

தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858

E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in

Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com


**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**


Regd. with the RNI under No. 67380/93
Licenced to post without pre-payment
Postal Regn. No. TN/CH/(C)/197/21-23
Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2021-23
Date of Publication: last week of previous month
Date of Posting : 27th & 28th of previous month
Posted at "Egmore RMS / 1 Patrika Channel"
on 29th AUGUST 2022
If un-delivered please return to:
ECHO OF HIS CALL (TAMIL)
P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.
Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766


*JESUS LOVES YOU!*

To

*GOD BLESS YOU!*

Owned and published by S. Sam Selva Raj from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by him at Echo of His Call Printers New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: S. Sam Selva Raj.